*News and Articles in Tamil and English Please send them to:*

**THE EDITOR,**

'The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka

Under No.Q / J / 104 / News / 89

*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*

Vol. 156 Jaffna, Friday, 06 January 1995 No. 01

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island . Rs.100/-
*For Advertisements*

*Apply to:*
**THE MANAGER**

'The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

## 'Oli Vila' at Jaffna College Institute of Agriculture Maruthanamadam

The students of Jaffna College Institute of Agriculture staged a very colourful Christmas 'Oli Vila' at their Institute Hall. The function was presided by the Rev. D. S. Thiagarajah, Principal, Christian Theological Seminary, Chunnakam. The Chief Guest was the Rt. Rev. Dr. S. Jebanesan, Bishop. The programme consisted of carol singing, Bharatha Natiyam and two very meaningful and thought provoking plays, portraying the life pattern and celebration of Christmas by families living in war torn Jaffna with their sons and daughters earning in foreign countries undergoing great hardships. The present and past students who participated in these plays displayed a very high standard of performance which kept the audience entertained with their humour. The Christmas message was delivered by the Rt. Rev. Dr S. Jebanesan. The welcome speech and Christmas thought was given by Mr. T. Kugathasan the Principal of the Institute who quoted verses from the Book of Isaiah which foretold the birth of Jesus Christ. The Rev. D. S. Thiagarajah gave a message on the meaning of Christmas in our present context in the strife ridden North and East. The vote of thanks was delivered by Mr. S. Kandiah ny, a Senior Lecturer of the Institute.

## 94 Schools closed in the North

After the outbreak of the civil war in June 1990, 94 schools have been closed in the Jaffna Peninsula. 37 schools were closed in zone 1 and in zone 2 which consists of Vadamarachchi, Valikamam and Islands, 57 have been closed. In zone I, 47 schools are either partially or fully damaged. In Zone 2, 188 schools have been damaged.

There are 43,500 children without adequate educational facilities in Jaffna. In the Islands 17,091 children are displaced and in Valikamam 15,113 children have left their former schools. These were based on statistics provided by the Director of Education, Zone 2

## New Year Message From Centre For Better Society

Each New Year is another special grace for God for renewal of our lives; a time of renewed hope for better times, and in our context, to see the long awaited cease-fire, the opening of a safe passage for travelling and lifting of all blockades.

Although these do not constitute peace itself, and are mere conditions for human living, the Government finds it difficult to yield even in these. This shows how far we have strayed into denial of even the necessities of life.

These are means adopted by the Government for the throttling of a people to subdue them and to force them to submit to their own terms of governing by the majority. While we sincerely strive for peace and harmony with all, we cannot afford to weaken our position, by begging for even these necessities of life concessions.

From inter-racial conflict, there are signs also of inter -religious conflict being roused up, as evidenced by the opposition to the Pope's visit by the Buddhist Clergy and extremists in the South. Let us hope and pray that the powers of darkness do not engulf this Island to make its already difficult situation worse.

Let this year turn out to be one of peace and inter-racial and inter-religious harmony.

**Fr. S. J. Emmanuel**
**Director**

**A. Santhiapillai**
**Gen. Secretary**

## Christmas at Pandetherippu

The Church bell at Pandetherippu C. S. I. Church started ringing at 3 00 p m. on Christmas day, after a lapse of over three years, since the evacuation of inhabitants. About 85 persons representing 20 families assembled in the war beaten Church to celebrate the birth of our Saviour. The parishioners wended their way (passed crumbled buildings, damaged roads overgrown with bushes) into Church to hail the birth of our Lord and Saviour. Everyone present were clad in their best outfits. They took their seats on mats. The floor was spotlessly cleaned. A Chrismas Tree constructed on a flower pot-left behind - decorated with balloons and Christmas cards, reminded everyone of Xmas. The Church was empty, devoid of all furniture, electrical fittings and with part of the roof damaged by artillery shells. Only the wooden railing of the altar remained. The Christmas communion service was conducted by the Rev. A. A. Paul, assisted by Rev.(Mrs) A. R. Tampiyappa, Worker - in Charge of the Church. Several carols were sung during the service. The Rev. A. A. Paul delivered the Christmas message "Peace on Earth and Goodwill among men". After the service everyone present gathered in the Church compound where a function took place to present the annual Christmas gifts to the children of the parish. After a message to the parish by Rev. (Mrs.) Tampiyappa, cake, short eats and coffee were served to everyone present Everyone was very happy, they exchanged greetings and were visibly moved to be able to meet in the Church again, amidst the ruined town of Pandetherippu. After sick communion was served in homes of the old and disabled, Christmas carols were sung in their homes Finally everyone parted from what was once their own dwelling places, sadly, on their bicycles, to their displaced place of living. Worship and communion service were resumed in the Church since July this year, after a few families returned to their dwellings The services are held on Sunday evenings, where about forty persons participate

## "70,000 New Christians Every Day", Claims Evangelical Leader

Rehe, Germany—Christianity is gaining about 70,000 new believers every day, mainly in developing countries, according to Augustin Vancer, international director of the World Evangelical Fellowship.

But in the developed world, secularisation causes about 53,000 people a week to leave the churches, Vancer told the Information Service of the German Evangelical Alliance.

Vancer said that the conversions to Christianity had shifted Christian "centre of gravity" to the South.

"Two-thirds of the 1,8 million Christians live in the South", Vancer said. He also predicted that "the doors for missionaries will be shut in many countries". Vancer said that, according to predictions in the year 2000 missionary work will not be permitted in 80 per cent of the "least Christianised countries".

## Bishop Azariah of Dornakal

In our note about Bishop Azariah in our last issue of the Morning Star, we regret the error about the years of his consecration. He was consecrated on the 29th of December 1912 and so it was 82 years ago and not 72.

In his day Bishop Azariah was so loved and revered that many parents Christened their boys "Azariah" Two of these boys have in their turn become Bishops themselves in the Church of South India. One of the Rayaseema Diocese and the other of the Madras Diocese.

# (❀) செய்திச் சிதறல் (❀)

## தென் இந்திய திருச்சபை ஊழியர் இடம் மாற்றம்

டிசம்பர் மாதம் 15ம் திகதி நடைபெற்ற தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனம் சபா சங்க செயற்குழு கூட்டத்தில் ஊழியர் இடமாற்றத்திட்டம் அறிவிக்கப்பட்டது ஊழியர்கள் 1 5, 95ல் புதிய ஸ்தானங்களை பொறுப்பேற்பார்கள். இவ்வருடம் ஐந்து வாலிபர்கள் நமது இறையியல் பள்ளியில் கற்று அரங்கேறி பணியாற்றத் தொடங்குகின்றனர்.

## யாழ் மாநகரசபையின் ஒளிவிழா

யாழ்ப்பாணம் மாநகரசபை தமது ஒளிவிழாவை இம்மாதம் 29ம் திகதி நடாத்தினார்கள். இந்த விழாவினை யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் திரு. வே, பாலசிங்கம் ஒழுங்கு செய்தார். தென் இந்திய திருச்சபையின் இளைப்பாறிய பேராயர் மகாகனம் டி. ஜே அம்பலவாணர் இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

## யாழ் செஞ்சிலுவை சங்கத்தின் ஒளிவிழா

யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒளிவிழா டிசம்பர் மாதம் 23ம் திகதி சுண்டிக்குழியில் உள்ள அவர்களுடைய காரியாலயத்தில் நடைபெற்றது. இந்த விழாவிலே நாட்டிய நாடகம், பரதநாட்டியம், சமூக நாடகம் போன்ற பல சிறப்பான நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

இந்த விழாவிற்கு செஞ்சிலுவை சங்கத்தின் துணைத் தலைவர் திரு பாலகிருஸ்ணா தலைமை தாங்கினார். செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளர் பேராசிரியர் வி. ரி. கமைலசலிங்கம் நன்றி தெரிவித்து பேசினார்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் நத்தார் பெருவிழா

கிளிநொச்சி மாவட்டத்திலே நத்தார் பெருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. கோணாவில், சமாதானபுரம், விசுவமடு, பாரதிபுரம் கிளிநொச்சி திருச்சபைகள் நத்தார் இன்னிசை குழுவை சீராக அமைத்து இல்லங்கள் தோறும் கிறிஸ்துவின் வருகையை குறித்த பாடல்களை பாடினார்கள். 24ம திகதி இரவும் 25ம் திகதி காலையும் நத்தார் ஆராதனைகள் வெகு சிறப்பாக நடைபெற்றன. 24ம் திகதி இரவு 2 மணிக்கு முறுகண்டியில் நடைபெற்ற கிறிஸ்மஸ் ஆராதனையிலும். அதிகாலை 3 மணிக்கு பாரதிபுரத்தில் நடைபெற்ற கிறிஸ்மஸ் ஆராதனையிலும் பேராயர்

வண எஸ் ஜெபநேசன் திருவிருந்து வழங்கினார். 25ம் திகதி காலை கிளிநொச்சியிலும், விசுவமடுவிலும் நடைபெற்ற ஆராதனையிலும் பேராயர் திருவிருந்து வழங்கினார்.

## பாப்பரசர் விஜயத்துக்கு 7000 யாழ் கத்தோலிக்கர் விண்ணப்பம்

ஜனவரி மாதம் 20ம் 21ம் திகதிகளில் பாப்பரசர் 2வது அருளப்பர் சின்னப்பர் கொழும்பு வரவிருக்கிறார். இவரை சந்திப்பதற்கு 7000 யாழ் கத்தோலிக்கர் விண்ணப்பம் செய்துள்ளனர். இவர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்படும் என்றும் கொழும்பில் உள்ள பிரபல கல்லூரி ஒன்றில் இவர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும் எனவும் தெரிகிறது.

## கிளிநொச்சியில் செஞ்சிலுவைச் சங்க கண்காட்சி

கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்க பயிற்சி மாணவர்களின் தட்டச்சு, தையல், சுருக்கெழுத்து பொருட்காட்சி நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் டிசம்பர் மாதம் 24ம் திகதி கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் மிக சிறப்பாக இடம்பெற்றது: பொருட்காட்சி நிகழ்விற்கு கிளிநொச்சி செஞ்சிலுவை சங்க செயலாளர் திரு. பொன் விநாயகமூர்த்தி தலைமை தாங்க இலங்கை செஞ்சிலுவை சங்க உப தலைவரும் கிளிநொச்சி மாவட்ட தலைவருமான திரு. எஸ். சிவராசலிங்கம் நாடவினை வெட்டித் திறந்து வைத்தார்.

## செரம்பூர் பல்கலைக் கழகத்தின் வருடாந்தப் கூட்டம்

செறம்பூர் பல்கலைகழகத்தின் கல்லூரியின் வருடாந்தக் கூட்டம் பெப்பிரவரி மாதம் 1ம் திகதி தொடக்கம் 5ம் திகதி வரை நடைபெறும் நமது இறையியல் பள்ளி அதிபரும் நமது ஆதீனத்தின் பேராயரும் இக்கூட்டத்தில் பங்குபற்றுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

## தமிழாராச்சி மகாநாடு இலங்கை அறிஞர்கள் புறக்கணிப்பு

ஜனவரி மாதம் 1ம் திகதி முதல் 5ம் திகதி வரை நடைபெறவிருக்கும் 8வது உலக தமிழாரய்ச்சி மாநாட்டுக்கு இலங்கையைச் சார்ந்த தமிழியல் அறிஞர்களுக்கு கதவடைப்புசெய்யப்பட்டுள்ளது. 200க்கு மேற்பட்ட அறிஞர்கள் விண்ணப்பம் செய்யப்பட்ட பொழுது ஒரு சிலருக்கு மட்டுமே அழைப்பிதழ்கள் கிடைத்துள்ளன அவர்களும் தமது புகைப்படங்களை அனுப்பி அழைப்பிதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளனர். புகைப் படங்களுடனேயே அவர்களுக்கும் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும் எனத் தெரிகின்றது

## கிறிஸ்தவ இறையிற் கல்லூரியின் கிறிஸ்மஸ் ஆராதனை

கிறிஸ்தவ இறையியற் கல்லூரியின் கிறிஸ்மஸ் ஆராதனை 17-ம் திகதி சனிக்கிழமை உடுவில் தேவாலயத்தில் நடைபெற்றது. இவ்வாராதனை முழுக்க கர்நாடக இசையைக் கொண்டதாக அமைந்தது. அன்று இசைக்கப்பட்ட பாடல்கள் சுன்னாகம் இறையியற் கல்லூரி பேராசிரியர்களினாலேயே பெரும்பாலானவை இயற்றப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆராதனையில் கொழும்புத்துறை புனித சவேரியார் இறையியற் பள்ளி மாணவர்களும் ஒரு விசேட பாடலைப் பாடினார்கள். இவ்விழாவின் நத்தார்ச் செய்தியை மெதடிஸ்த திருச்சபைக் குரு வண. எவ் எஸ் கருணைராஜன் வழங்கினார்.

## அத்தியட்சரின் புதுவருடச் செய்தி



"சகோதரரே அதை பிடித்துக் கொண்டேன் என்று நான் எண்ணுகிறது இல்லை. ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த அழைப்பின் பந்தய பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். (பிலி 3 : 14)

1994ம் ஆண்டு மறைகிறது, புதிய ஒரு வருடம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது முதலாவதாக நமது ஆயுளில் மேலும் ஒரு வருடத்தை கூட்டிச் சேர்த்தமைக்காக கடவுளை துதிப்போமாக.

1994ம் ஆண்டு நாம் பலவிதமான அனுபவங்களைச் சந்தித்திருக்கிறோம். சில இனிப்பானவை! சில கசப்பானவை. வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமானால் கசப்பானவைகளை மறந்துவிட வேண்டும். பவுல் அப்போஸ்தலனின் வெற்றி வாழ்க்கைக்கு இதுவே காரணமாகும் ஒரு கட்டத்தில் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியவர் பவுல், இது அவருக்கு ஒரு கசப்பான நினைவு. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டமையினால் யூதர்களினால் துன்புறுத்தப்பட்டவர். ஆரம்பத்தில் பழம்பெரும் அப்போஸ்தலர்கள் அவரை அன்புடன் ஏற்றுக் கொள்ளவில்லை, போட்டியும் பொறாமையும் காணப்பட்டன ஆனால் பவுல் அப்போஸ்தலன் இவற்றையெல்லாம், சிந்தித்துக் கொண்டு தனது காலத்தை வீணாய்க் கழிய விடவில்லை

இன்று உலகத்திலே பலர் தமக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களைக் குறித்தே எப்பொழுதும் பேசிக கொண்டிருக்கின்றனர். தமக்கு ஏற்பட்ட ஏமாற்றங்களையும் தோல்விகளையும் பட்டியல் போட்டு காட்டுகின்றனர், இவர்களைக் கசப்பு உணர்வுகளைச் சேகரிப்பவர்கள் (Grievence Collectors) என்று உளவியல் அறிஞர் கூறுவர் இந்தச் சேகரிப்பினால் அவர்களுக்கும் ஒரு பயனும் இல்லை. உலகத்தாருக்கும் ஒரு பயனும் இல்லை

ஒரு பட்டிணத்திலே ஒரு களியாட்ட விழா நடைபெற்றது. ஆனந்தச் சுழற்சி அல்லது Merry Go Round எனப்படும் ஊர்தித் தொடரில் பிள்ளைகள் மகிழ்ச்சியாக சுழன்று கொண்டிருந்தனர். ஒரு வயோதிப மனிதனும் இந்த ஆனந்தச் சுழற்சியில் ஏறியிருந்தார். அவர் ஒரு மரக் குதிரையில் ஏறியிருந்து மிகுந்த கவலையோடு எதனையோ யோசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒருவன் அவனை நோக்கி ஏன் இவ்வளவு கவலையோடு இந்த ஊர்தியில் போய்கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டான். அதற்கு அந்த மனிதர் இந்த களியாட்ட விழாவை நடாத்துபவர் என்னிடம் 5000 ரூபா கடன் வாங்கினார் அதைத்தர மறுக்கின்றார் இப்பொழுது 3000 ரூபாவுக்கு நான் இந்த ஊர்தியில் ஓடி விட்டேன் இன்னும் 2000 ரூபாவுக்கு ஓடிவிட்டுத்தான் இறங்குவேன் என்று குறிப்பிட்டார்.

இப்படியாகத்தான் அநேக மக்கள் பின்னானவைகளை மறக்க மனதில்லாமல் அவற்றைக் குறித்தே சிந்தித்து கவலைப் பட்டுக் கொண்டிருக்கின்றனர். காலம் வீணாய்க் கழிந்து கொண்டிருக்கின்றது

காலநீரோட்டம் விரைந்து ஓடுகின்றது. பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி பந்தயப் பொருளின் இலக்கை நோக்கி தொடருவோம்.

† எஸ். ஜெபநேசன்
அத்தியட்சர்

நீதி ஜனத்தை உயர்த்தும் பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி. நீதி: 14 - 34.


# உதயதாரகை

ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை
Estd. 1841

மலர்: 156 06 . 01 . 1995 இதழ்: 01


# தொடர்ந்து செயலாற்றும் இறைவன்

எல்லாம் வல்ல இறைவன் மீண்டும் ஒரு புதிய ஆண்டைக் காணும் வாய்ப்பை நமக்களித்துள்ளார். இருபதாம் நூற்றாண்டின் இறுதி ஐந்தாம் ஆண்டின் (1995ம் ஆண்டின்) தொடக்கத்தில் வந்து நிற்கின்றோம். இம்மட்டும் சீவன் தந்த கர்த்தாவை அத்தியந்த எண்ணமாய் தோத்தரிப்போமாக.''

கடந்த 17 ஆண்டுகளாக இந்நாட்டு மக்கள் குறிப்பாகத் தமிழ் மக்கள் அடைந்த துன்பங்கள், அழிவுகள் அளப்பரியன. வாழ்வின் பல துறைகளில் அடக்கி ஒடுக்கப்பட்டனர் சிங்கள இராணுவத்தின் கொடூரச் செயல்களினால் பெரும் அழிவுகளை அடைந்தனர். கொடுந்துயரத்திற்குள் ஆளாயினர். பாடுகள் நிறைந்த பழைய ஆண்டு கழிந்தது.

துன்பங்கள், துயரங்கள் மத்தியில் நம்மை அற்புதமாய் அரவணைத்துக் காத்துவந்த இறைவன், இவ்வாண்டிலாவது சமாதானத்தைத் தரமாட்டாரா? எனத் தமிழ் மக்களும், பெரும்பாலான சிங்கள மக்களும் ஆவலாய்க் காத்துக்கொண்டிருக்கின்றனர் திருமதி சந்திரிக்கா அம்மையாரின் தலைமையில் ஆட்சிபீடத்தில் அமர்ந்த புதிய அரசாங்கம் - சமாதானத்திற்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கையுடன், இது ஒரு நம்பிக்கையின் ஆண்டாக அமையுமென்று நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர். பாப்பரசரின் வருகை இந்நாட்டில், இறையருளால் சமாதானத்தை மலரச்செய்யும் என்பதே பலரின் நம்பிக்கை.

இம்மானுவேலாக நம் மத்தியில் வந்துதித்த இறைமகன் இயேசுபிரான், இத் துன்பகாலத்திலும் நம்முடன் தங்கி செயலாற்றி வருகிறார். எம்பெருமான் நம்முடன் இருக்கும்போது நாம் நம்பிக்கையற்றோராய் பயப்படத் தேவையில்லை. அவரே நம் குறைகளை நிறைவாக்க வல்லவர். அவர் இருக்கும் இடத்தில் தண்ணீர் திராட்சை இரசமாகிறது. சப்பென்று சுவையற்றுப்போன எம் வாழ்க்கை புதுமணமும் புதுச்சுவையும் பெற்றுத் துலங்க அவர் கைப்பட்டால் ஐந்தப்பமும் ஐயாயிரம் பேரைப் போஷிக்கும். அவர் ஆடையின் ஓரம் நம்மீது படும்போது, நம்மைப் பீடித்துள்ள உபாதையும் பிணியும் நொடிப் பொழுதில் அகலும்.

தமது தாசனாகிய யோசுவாவின் மூலம் எரிக்கோ பட்டனத்தை அற்புதமாய் முறியடித்து வீழ்த்திய கடவுள் கிதியோன் மூலம் மீதியானியரை அற்புதமாய் முறியடித்த இறைவன் அவர் இன்றும் வல்லமையோடு செயலாற்றி வருகிறார். நேற்றும் இன்றும் என்றும் மாறாத கடவுள் 'இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்' என்று வாக்களித்த எம் பெருமான் நம்மோடிருக்கையில் நமக்கென்ன குறையுண்டு.

வாழ்க்கையின் குறைவு நீங்கி நிறைவு ஏற்படும். இன்றைய போர்ச் சூழ்நிலையால் மனங்குழம்பி, அஞ்சி, நடுங்கிப் பதுங்கிக்கிடக்கும் நம்மிடம் வந்து ''உங்களுக்குச் சமாதானம்'' என்ற அருள் வாக்கை அருளி, தமது ஆவியைப் பொழிந்து, உயிர்ப்பளித்து நம்மைச் செயல் வீரராக மாற்றுகிறார்.

நம்பிக்கை இருக்குமிடத்தில் கவலைக்கு இடமில்லை அந்தந்த நாள் உணவுக்காக ஜெபிக்கக் கற்றுக்கொடுத்த நம் ஆண்டவர், அடுத்த நாளுக்கு வேண்டிய அருளை நமக்குத் தருவார் அல்லவா? நம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பவர் அவரே வருங்காலத்தைப் பற்றிப் பதகளிக்கும் எம்மை நோக்கி; 'திகையாதே, கலங்காதே, நான் உன்னோடிருக்கிறேன்' என்ற உறுதியை அளிக்கும் நமதாண்டவர், இப்புத்தாண்டிலும் தொடர்ந்தும் நம்மை வழி நடத்துவார் என்பது நிச்சயம்.

அன்று ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்த இறைவன், ''நான் உன்னை ஆசீர்வதிக்கிறேன்...நீ மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருப்பாய்'' என்றாரல்லவா? இதுவரை, நாம் தளர்ந்து சோர்ந்து விழுந்துவிடாமல் நம்மைத் தாங்கி வழி நடத்திவந்த இறைவன், இப்புத்தாண்டில் நாம் சுயநலத்துடன் 'நானும் என் கடவுளும்' என்று வாழாமல், மற்றவர்களின் துயரைத் துடைத்து. மனக் கிலேசத்தைப் போக்கி மற்றவர்களுக்கு அன்புசெய்து ஆசீர்வாதமாயிருப்பதற்கே.

கிறிஸ்தவர்களாய் நாம் இந்நாட்டின் அந்தரங்க அத்திவாரமாய் அலையவிடாது நிற்கச் செய்யும் நங்கூரமாய் சமாதனமற்ற இடங்களில் சமாதானம் செய்கிறவர்களாய் செயல்படவே அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே இப்புதிய ஆண்டில் இறைவனால் நமக்களிக்கப்பட்ட பொறுப்பை உத்தரவாதத்துடன் நிறைவேற்ற வேண்டும் இதனையே நமது சமூகமும் நமது நாடும் நம்மிடம் எதிர் பார்க்கிறது. ஆகவே. அன்பும் மகிழ்ச்சியும் சமாதானமும் இப்புத்தாண்டில் பெருக அயராது உழைப்போம் வாருங்கள்.

''நெஞ்சினில் அன்பைக் கொண்டு
குவலயம் சிறக்க வாழ்ந்து
வஞ்சனை பொய்மை நீக்கி
வாட்டிடும் வறுமை போக்கி
நெஞ்சிலே உண்மை தாங்கி
நினைவிலும் நேர்மை யோங்கி
துஞ்சுதல் இன்றி நாயும்
துலங்குவோம் புதிய ஆண்டில்''

## நற்சமூக நடுநிலையத்தின் புத்தாண்டுச் செய்தி

ஒவ்வொரு புத்தாண்டும், எமது வாழ்வைப் புதுப்பிக்க இறைவனால் வழங்கப்படும் சிறப்பான அருள் மழையாகும், அத்தோடு, விடுதலைப் பிரசவத்திலிருக்கும் எமக்கு ஆவலோடு எதிர்பார்த்திருந்த யுத்தநிறுத்தம், பாதுகாப்பான வழி திறக்கப்படல், எல்லாவித தடைகளின் நீக்கம் ஆகியவை உட்பட்ட ஒரு சமூக வாழ்வுக்கான நம்பிக்கையின் புத்தூக்கமாகவும் அமைகின்றது.

இவை மூன்றும், மனித வாழ்வுக்கான அடிமட்ட சூழ்நிலைகளேயன்றி முழுமையான அமைதியாய் அமையா. இவற்றைக் கூட விட்டுக் கொடுக்க அரசு சிரமப்படுகிறது. இது வாழ்வுக்கு இன்றியமையாதவற்றையே மக்களுக்கு மறுப்பதில் எவ்வளவுக்கு ஆழமாக அமிழ்ந்திருள்ளோம் என்பதைக் காட்டுகிறது

இம் மறுப்பு ஒரு இனத்தை அடிபணிய வைக்கவும் மனித உரிமைகளின் கீழ்மட்டப் படிநிலையை ஏற்க அம்மக்களை நிர்ப்பந்திக்கவும் கையாளப்படும் வழியாகும். எனவே எல்லோருடனும் அமைதியையும் ஒத்திசைவையும் நேர்மையோடும் நீதியோடும் தேடும் அதே வேளையில் மனித வாழ்வுக்கு இன்றியமையாத இவற்றைச் சலுகையாக பெற மண்டியிட்டு, எமது நிலைப்பாட்டை பலவீனப்படுத்த முடியாது.

திருத்தந்தை பாப்புவின் வருகைக்குப் புத்த குருக்களும், தீவிரவாதிகளும் எழுப்பும் எதிர்ப்பை நோக்கும் போது, எமது நாடு இன அடிப்படையிலான போரிலிருந்து மதக் கலவரத்திற்கும் புகும் அறிகுறிகள் தென்படுகின்றன. அழிவுச் சக்திகள் இந் நாட்டை ஆட்கொண்டு முன்னரே சிக்கலாயுள்ள அதன் நிலையை மேலும் மோசமாக்காதென நம்புவோம்.

இப் புத்தாண்டு உண்மையான அமைதியின் ஆண்டாகவும் இன, மத அடிப்படையில் புரிந்துணர்வின் ஆண்டாகவும் அமைவதாக

அருட்திரு. சி. யோ. இம்மானுவேல்
இயக்குனர்

அ. சந்தியாப்பிள்ளை
பொதுச் செயலர்

## அனுமதியின்றி வெளிநாடு சென்றோர் வேலை நீக்கம்

கல்வித் திணைக்களம் அனுமதி பெறாது வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்பு தேடிச் சென்ற அனைவரும் வேலையை காலி செய்தவர்களாகவே கணிக்கப்படுவார்கள் என்று அறிவித்துள்ளது. அவர்கள் அவர்கள் மீண்டும் நாடு திரும்பி வேலையில் சேர்வதற்குரிய உரிமையை இழப்பார்கள் எனவும் கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சேட் பத்திரன அறிவித்துள்ளார்

# The Morning Star

Diocesan Office, Vaddukoddai 06 . 01 . 1995


## EDITORIAL

### Epiphany

Epiphany means the manifestation of Christ to the world. Every year, Epiphany is observed on January 6th.

Christmas is celebrated on December 25th in all churches except the Church of Armenia, for which it is on January 6th. The enemies of the Western world were driven back on a 6th of January so the Western Church started to observe January 6th as the day of Epiphany. Initially, Epiphany was observed as commemorating Jesus' baptism & his changing water into wine. Later, the visit of the Magi from Christmas was added.

The observance of Epiphany is important because on that day we remember the adoration of Christ by the Magi. They were revealed that Christ would be born in Bethlehem; they came in search of Him; worshipped Him; offered Him their treasures-gold, frankinsence & myrrh.

John says, 'the word became flesh & dwelt among us, full of grace & truth; we beheld his glory'. Jn. 1:14. Yes, Christ manifested; the Magi saw him. Christ revealed & the disciples saw him and Paul says, 'fullness of Godhead manifested bodily in Christ; those look upto Him will be able to see His glory-the glory of God himself.

Today people are involved in a rat race. Every one wants to earn more money. They have no time for God. Such people are unable to see the manifestation of Christ. They heap treasures on earth. Jesus said that where one's wealth is, there will his heart also be. Their heart is on this world so their eyes are blinded to see the manifestation - showing himself clearly. The prophecy, 'seeing they never see and hearing they never hear' is fulfilled in them.

All who want to see Christ should be willing to sacrifice everything. The Magi left all comforts of home, left their country and set themselves on a long, arduous journey. They found their Lord among the poor & homeless. As they offered all their treasures to that refugee child, they saw God accepting their gifts. In the smile of this alien, they saw the smile of God. Likewise, if we work among the poor, provide shelter to the homeless and give all our treasures to those in need we will see Christ.

Let us go in search of 'Word which manifested in Jesus'.

## Man of the Twentieth Century

The Father's family is also a channel of his love and healing to wounded people when we love, accept and forgive one another, as God's children and as brothers and sisters. God's love flows through us to heal one another. Fellowship and friendship are one of the sacraments of the church. A sacrament is traditionally defined as a means of grace. The sacraments include such things as baptism in water, and the Lord's Supper.

Through our brothers and sisters in God's family, God provides the kind of love and acceptance that frees us from fears and allows us to grow into greater wholeness as people We can be ourselves and be committed to others without fear of rejection. We can accept others in spite of their weaknesses We can forgive even when others hurt us. All this is because of God's grace. We don't have the ability within ourselves to be so loving that is his undeserved love, that does this for us. But God enables us to love that way. We don't have the ability within ourselves to heal one another, but through us God heals others. Every Christian has this ministry. We are 'Grace givers.' If we are wounded, we should be careful not to put our focus on people as the source of healing in our lives. People cannot give what only God can give. If you want people to heal you, you will easily be disappointed. If we focus our attention on the heavenly father he is the only one capable of healing you. He will often do that through people, but remember that he is the source and people are the channel. Emotional healing is almost always a process. It takes time There is a very important reason for this. Our Heavenly Father is not only wanting to free us from pain of past wounds, he is also desirous of bringing us into maturity, both spiritually and emotionally. This takes time because we need time to learn to make right choices. He loves us enough to take the months and years necessary, not only to heal our wounds, but also to build our character. Without growth of character, we will get wounded again. We will do foolish, selfish things that will hurt us or provoke others to hurt us. Because he loves us he waits for us to want this kind of character growth. He waits for us to be ready to be healed. Often it is our right response to others that releases this healing into our lives. How God heals our wounds (1) Acknowledge your need o healing. (2) Don't feel that you are an exemption (3) Tell Him your hurts, fears, disappointments, and everything, for He loves honesty. (4) Confess your sins (5) Receive God's grace (6) Trust the Lord (7) Build heart relationships with God and others (8) Confess negative emotions (9) Forgive those who hurt you (10) Receive forgiveness (11) Receive the Father's love (12) Thank God's thoughts (13) Endure.

Compiled by
Kingsley Thampiyappa at the Ecumenical Institute, Bern Switzerland

## 18 Million Bibles Distributed in 1992/93

Reading, England - More than 18 million Bibles were distributed worldwide between 1st November 1992 and 31st October 1993, according to the United Bible Societies Scripture Distribution Report for 1993.

The number of Bibles distributed in the Asia Pacific region was up by 12.9 per cent to 5,297,472, largely because of Bible production by the Amity Printing Press in China.

In 1992/93 more than 1.4 million Bibles were distributed in China by the China Christian Council.

Almost 500,000 Bibles were distributed in Africa in 1992/93. In Latin America, more than a million Bibles were distributed in Brazil alone.

## *In Loving Memory* OF



**Kanagam Subramaniam**

Born: *07-10-1911*
Departed: *08 01 1979*

There is in all this cold
and hollow world,
No fount of deep, strong
deathless love save
That within a mother's heart
- Hemans

Fondly remembered by her loved ones
Sri Lanka and Australia.

Bishop's House,
Vaddukoddai

Registered as a News Paper at the G P. O. Sri Lanka under No. Q / J / 140 / 94. News Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press, 182, Ist Cross Street, Jaffna on Friday the 06th of January 1995 and published by Mr. T. Tambiappa, Diocesan office, Vaddukoddai.